**CNR.No. TNKK-1400-0349-2019**

**நீதித்துறை நடுவர்  விரைவு நீதிமன்றம், இரணியல்**
**முன்னிலை திரு.T.நரேந்திரகுமார், B.A., LLM.,PGDFL.,**
நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம்
**2026** ஆம் ஆண்டு **ஆகஸ்ட்** மாதம் **06**ஆம் நாள் **வியாழக்கிழமை**
**ஆண்டுப்பட்டியல் வழக்கு எண். 125/2019**

## CASE SUMMARY

| Statement as per Rule 106 of the Criminal Rules of Practice, 2019 | | | |
|---|---|---|---|
| 1 | Case Number | | Calendar Case (CC) No.125 of 2019 |
| 2 | Name of the Police Station and Crime Number | | State of Tamilnadu,<br>Represented by its<br>Sub Inspector of Police,<br>Eraniel Police Station,<br>Eraniel. (Cr.No. 698/2012).<br>…..Complainant |
| 3 | Name of the Accused person | Description of the Accused | Rajesh |
| 4 | Father's/Husband's Name | | son of Chellaiyan |
| 5 | Occupation | | Driver |
| 6 | Residence of the Accused | | Vadakkuvilai, Kakkurichy, Thuckalay PO |
| 7 | Age and Gender | | 26/2012, Male |
| 8 | Date of Occurrence | Date of | 29.09.2012 |
| 9 | Date of Information to the Police | | 29.09.2012 |
| 10 | Apprehension | | 09.10.2012 |
| 11 | Release on Bail | | 09.10.2012 |
| 12 | Period of remand of the accused | | -- |
| 13 | Filing of complaint/final report in the Court | Date | 28.06.2013 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | Committal of the case to the Court of Sessions | of | Nil | | |
| 15 | Questioning of the accused u/s 281 of Cr.P.C | | 24.06.2014 | | |
| 16 | Commencement of Trial (the date on which the documents u/s 207 of the Cr.P.C are furnished to the accused | | 04.06.2025 | | |
| 17 | Examination in Chief and Cross examination of a witness | | Witness | Chief Examination | Cross Examination |
| | | | P.W.1 | 04.06.2025 | 04.06.2025 |
| | | | P.W.2 | 04.06.2025 | -- |
| | | | P.W.3 | 04.06.2025 | -- |
| | | | P.W.4 | 04.06.2025 | -- |
| | | | P.W.5 | 25.06.2025 | -- |
| | | | P.W.6 | 25.06.2025 | -- |
| | | | P.W.7 | 25.06.2025 | -- |
| | | | P.W.8 | 23.02.2026 | -- |
| | | | P.W.9 | 27.07.2026 | -- |
| | | | P.W.10 | 29.07.2026 | 29.07.2026 |
| 18 | Date of examination of the accused under section 313(1)(b) of Cr.P.C | | 04.08.2026 | | |
| 19 | Closure of Trial | | 06.08.2026 | | |
| 20 | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be | | Warrant | Abscondence | Appearance |
| | | | Non-Bailable Warrant | 02.03.2021 | 11.08.2021 |
| 21 | Grant of stay by superior Courts and results thereof | | Nil | | |
| 22 | Sentence or Order | | முடிவாக, குற்றம் சுமத்தப்பட்ட நபரான ராஜேஷ் த/பெ. செல்லையன் என்பவர் மீதான இந்திய தண்டனைச் சட்டம் 1860 | | |

| | | | |
|---|---|---|---|
| | | | பிரிவு 304A r/w 187 r/w 177 of MV Actன் கீழான குற்றச்சாட்டுகளை பொறுத்து அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால், மேற்படி நபரை மேற்படி குற்றச்சாட்டி களிலிருந்து விடுதலை செய்தும், குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 248(1) ன் படி வழக்கிலிருந்தும் விடுதலை செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 23 | Service of copy of judgment of findings on accused | | Copy of the judgment will be uploaded in CIS and made available for viewing in e-courts services portal. |
| 24 | Explanation of delay | | Delay caused due to the delay of service of summons to the Prosecution Side listed witnesses by the Prosecution. |
| 25 | Details of victim compensation ordered | | Nil |
| 26 | Filing of miscellaneous petitions and their results including the results on challenge before Superior Court | | Petition: U/s.311 of Cr.P.C — Crl.M.P.No. 17/2026 — Result: Allowed<br>Petition: U/s.294(2) of Cr.P.C — Crl.M.P.No. 18/2026 — Result: Allowed |

| Petition | Crl.M.P.No. | Result |
|---|---|---|
| U/s.311 of Cr.P.C | 17/2026 | Allowed |
| U/s.294(2) of Cr.P.C | 18/2026 | Allowed |

| | |
|---|---|
| தமிழ்நாடு மாநில அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>இரணியல் காவல் நிலையம்,<br>குற்ற எண். 698/2012 | ............ குற்றமுறையீட்டாளர், |

/எதிர்/

| | |
|---|---|
| ராஜேஷ் (வயது 26/2012)<br>த/பெ.செல்லையன்,<br>வடக்குவிளை,<br>கக்குறிச்சி, தக்கலை அஞ்சல். | ............... குற்றம் சுமத்தப்பட்ட நபர் |

இவ்வழக்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றம் இரணியலில் 28.06.2013ஆம் தேதி ஆ.ப.வ.எண்.202/2013 என்ற எண்ணாக கோப்பிற்கு எடுக்கப்பட்டு ROC No.141/2019–A dated 18.09.2019ன்படி இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு 30.09.2019ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் கோப்பில் எடுக்கப்பட்டு இது நாள் வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இவ்வழக்கு 06.08.2026ம் தேதி இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வரப்பெற்று அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1 அவர்களும், குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.பத்மகுமார் அவர்கள் ஆஜராகியும், வாதத்தை கேட்டும் ஆவணங்களை ஆராய்ந்தும் இன்று 06.08.2026 ஆம் தேதி இந்நீதிமன்றம் கு.வி.மு.ச 1973 அத்தியாயம் XXVIIன் கீழ் பிறப்பிக்கும்.....

## <u>தீர்ப்புரை</u>

இத்தீர்ப்புரையில் இந்திய தண்டனைச்சட்டம் 1860 என்பது இ.த.ச 1860 என்றும், குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் 1973 என்பது கு.வி.மு.ச 1973 என்றும் பதிவிடப்படுகின்றது.

1. <u>**அரசுத்தரப்பு வழக்குரையின் சுருக்கம் :-**</u>

கடந்த 29.09.2012ம் தேதி மாலை சுமார் 17.30 மணிக்கு திங்கள்நகர் to தோட்டியோடு செல்லும் மெயின்ரோட்டில் பரசேரி என்ற ஊரில் ஸ்ரீனிவாசன் என்ற ஆட்டோ டிரைவரின் வீட்டு முன்பு செல்லும் மெயின்ரோட்டில் ஜெயராஜன் என்பவர் TN 75 A 3642 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda Super Splendor என்ற இருசக்கர வாகனத்தில் மேற்படி ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது பின்னால் TN 75 J 6477 என்ற மகேந்திரா வேனை குற்றம் சுமத்தப்பட்ட நபர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து மேற்படி இருசக்கர வாகனத்தின் பின்புறமாக மோதி வாகன விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்ற ஜெயராஜன் கீழே விழுந்ததில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு மயங்கிய

நிலையில் கிடந்த போது, குற்றம் சுமத்தப்பட்ட நபர் காயம்பட்ட நபருக்கு உதவி செய்வது போல் நடித்து எதிரே வந்த வெள்ளை நிற டாடா சுமோ வாகனம் தான் விபத்தை ஏற்படுத்திவிட்டு சென்று விட்டது என்று கூறி விபத்தை ஏற்படுத்திய மகேந்திரா வேனுடன் தப்பி சென்றுள்ளதாகவும், மேற்படி காயம்பட்ட ஜெயராஜன் என்பவரை ஆசாரிப்பள்ளம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே இறந்துவிட்டதாகவும், எனவே குற்றம் சுமத்தப்பட்ட நபரின் செய்கையானது இ.த.ச 1860 பிரிவுகள் 304–A இதச உ/இ 187 MV Act ன் கீழ் தண்டிக்கத்தக்கவர் என்று கு.வி.மு.ச.1973 பிரிவு 173(2)– ன்படி குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>கு.வி.மு.ச 1973 பிரிவு 207ன் கீழ் இலவசமாக நகல் வழங்குதல் :–</u>**

இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் நீதிமன்றத்தில் முன்னிலை யானவுடன் குற்றமுறையீட்டு காவல் நிலையத்தார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச 1973 பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. **<u>கு.வி.மு.ச 1973பிரிவு 240ன் கீழ் குற்றச்சாட்டு வனைதல் :-</u>**

வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதின் அடிப்படையில் இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது குற்றம் புரியப்பட்டிருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு ஆதாரம் இருந்ததால் கு.வி.மு.ச 1973 பிரிவு 240ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது இ.த.ச.1860 பிரிவு 304–A இதச உ/இ 187 r/w 177 MV Act ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்டதில் இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர், தான் குற்றவாளி இல்லை எனக்கூறி குற்றத்தை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டினார். எனவே அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச 1973 பிரிவு 242 ன் கீழ் உத்தரவிடப்பட்டது.

**4. <u>கு.வி.மு.ச1973 பிரிவு 242ன் கீழ் அரசுத்தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் :-</u>**

அரசுத்தரப்பில் அ.சா.1 விஜில்குமார், அ.சா.2 சதாசிவன், அ.சா.3 கோபிநாதன், அ.சா.4 சுரேஷ், அ.சா.5 ஓமனா, அ.சா.6 லலிதா, அ.சா.7 பானு, அ.சா.8 ராணி, அ.சா.9 ஸ்ரீனிவாசன், அ.சா.10 சேவியர் பிராங்கிளின் ஆகியோர்கள் அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

**5. <u>அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம் :-</u>**

(i) அ.சா.1 விஜில்குமார் அவரது சாட்சியத்தில் சம்பவத்தை நேரில் பார்த்தது குறித்து சாட்சியமளித்துள்ளார்.

(ii) பார்வை மகசர் சாட்சியான அ.சா.2 சதாசிவன் அவரது சாட்சியத்தில் பார்வை மகசரில் கையெழுத்து செய்தது குறித்து சாட்சியமளித்துள்ளார்.

(iii) ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான அ.சா.3 கோபிநாதன் மற்றும் அ.சா.4 சுரேஷ் ஆகியோர்களது சாட்சியத்தில் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தது குறித்து சாட்சியமளித்துள்ளார்கள்.

(vi) சம்பவ சாட்சிகளான அ.சா.5 ஓமனா, அ.சா.6 லலிதா, அ.சா.7 பானு, அ.சா.8 ராணி, அ.சா.9 ஸ்ரீனிவாசன் ஆகியோர்களது சாட்சியங்களில் சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார்கள்.

(v) அ.சா.10 சேவியர் பிராங்கிளின் கூடுதல் சாட்சி ஆவணங்களின் அடிப்படையில், புலனாய்வு அதிகாரிக்கு பதிலாக சாட்சியமளித்துள்ளார். அவரது சாட்சியத்தில் வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விசாரணை அதிகாரி வழக்கு கோப்பை விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியமளித்துள்ளார்.

6. **<u>கு.வி.மு.ச 1973பிரிவு 313 (1)(b)ன் கீழ் வினவுதல் : –</u>**

அரசுத்தரப்பில் சாட்சியம் அளித்துள்ள சாட்சிகளின் சாட்சியத்தினை தொகுத்து குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகள் குறித்து குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் கு.வி.மு.ச 1973 பிரிவு 313 (1)(b)ன் கீழ் வினவ குற்றம் சுமத்தப்பட்ட நபர் பொய் சாட்சி என்றும், குற்றவாளி இல்லை என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

7. **<u>கு.வி.மு.ச 1973 பிரிவு 243ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் : –</u>**

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தங்களது தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் இல்லையென்று கூறியதால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

8. **<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயங்கள் : –</u>**

1) இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது இ.த.ச 1860 பிரிவு 304–A உ/இ 187 r/w 177 MV Act ன் கீழ் குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

2) நிரூபிக்கப்பட்டிருப்பின் குற்றவாளிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை யாவை?

9. **<u>பிரச்சனைக்கான தீர்வுகள் : –</u>**

இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் 29.09.2012ம் தேதி மாலை 05.30 மணியளவில் திங்கள்நகர் to தோட்டியோடு செல்லும் மெயின்ரோட்டில் பரசேரி என்ற ஊரில் ஸ்ரீனிவாசன் என்பவரின் வீட்டின் முன்பு செல்லும் பிரதான சாலையில் TN 75 J 6477 என்ற எண் கொண்ட மகேந்திர வேனை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி சென்று TN 75 A 3642 என்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி, அதை ஓட்டி சென்ற ஜெயராஜன் என்பவருக்கு மரணத்தை ஏற்படுத்தினாரா என்பது அரசுதரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்று பார்க்கும்போது,

**10. முதலில் இவ்வழக்கில் விபத்தினால் ஜெயராஜன் என்பவர் இறந்துள்ளாரா என்ற சங்கதியை பொருத்து** அ.சா.1, அ.சா.4 ஆகியோர்களின் சாட்சியத்திலிருந்தும், அ.சா.ஆ.7 ஆன பிரேத விசாரணை அறிக்கை மற்றும் அ.சா.ஆ.9 ஆன சடலக்கூறாய்வு அறிக்கையிலிருந்தும் ஜெயராஜன் என்பவர் இயற்கையாக அல்லாமல் விபத்தினால் ஏற்பட்ட காயத்தின் காரணமாக இறந்துள்ளார் என்பது அரசுத்தரப்பு சாட்சிகளின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**11. மேலும் இவ்வழக்கில் ஜெயராஜன் என்பவருக்கு ஏற்பட்ட மரணம் ஒரு வாகன விபத்தினால் ஏற்பட்டதா? மேற்படி விபத்திற்கு வாகனத்தின் இயந்திர கோளாறு காரணமா? என்ற சங்கதியை பொருத்து** அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து ஜெயராஜன் என்பவர் வாகன விபத்தில் இறந்துள்ளார் என்பது தெரியவருகிறது. மேலும் அசாஆ.8 ஆக விபத்தில் சம்மந்தப்பட்டதாக சொல்லப்படும் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில், மேற்படி வாகன விபத்தானது இயந்திரக்கோளாறால் ஏற்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. எனவே இந்த வாகன விபத்தானது இயந்திரக்கோளாறால் ஏற்படவில்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**12. மேலும் மேற்படி விபத்தை குற்றம் சுமத்தப்பட்ட நபரின் கவனக்குறைவு, அஜாக்கிரதை அல்லது அதிவேகமாக இயக்கி அந்த செயலால் மேற்படி ஜெயராஜன் என்பவருக்கு இறப்பு ஏற்படுத்தப்பட்டதா என்பதை பொருத்து பரிசீலனை செய்யும்போது,** அரசு தரப்பில் கண்ணுற்ற சாட்சியாக முன்னிறுத்தப்பட்ட அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து 29.09.2012ம் தேதி மாலை 05.00 – 05.30 மணியளவில் அவரது நண்பர் ஜெயராஜ் என்பவர் இருசக்கர வாகனத்தில் இரணியல் ஆர்.சி சர்ச்சில் இசை கச்சேரி முடித்துவிட்டு நாகர்கோவில் சென்று கொண்டிருந்தார் என்றும், அப்போது அ.சா.1ம் மற்றொரு இருசக்கர வாகனத்தில் பின்னால் சென்று

கொண்டிருந்ததாகவும், அப்போது பரசேரி அருகே City Ride Tourist van என்ற வாகனம் அவரது நண்பரின் இருசக்கர வாகனத்தை அதிவேகமாக முந்தி செல்லும் போது, அவரது நண்பரின் இடதுபுறத்தில் இடித்தது என்றும், அதில் அவரது நண்பர் வண்டியின் பின் சக்கரத்தில் சிக்கி 100 மீட்டர் தூரம் இழுத்துக்கொண்டு சென்றதாகவும், அப்போது அ.சா.1ம் மற்ற நபர்களும் கூச்சல் போட்டதால் வேன் நின்றது என்றும், விபத்தில் பலத்த காயம் ஏற்பட்டிருந்ததால் அவரை ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், ஆனால் அவர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் கூறியதாக சாட்சியமளித்துள்ளார்.

**13.** மேலும் அவரது குறுக்கு விசாரணையில், இறந்துபோன ஜெயராஜ் என்பவர் இருசக்கர வாகனத்தில் கீபோர்டு இசை கருவியை வாகனத்தின் சைடில் வைத்து செல்லவில்லை என கூறியிருந்தார். ஆனால் அவரிடம் காட்டப்பட்ட வாக்குமூலத்தில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்று ஒப்புக்கொண்டார். ஆனால் அ.சா.1 இறந்துபோன ஜெயராஜ் என்பவர் இருசக்கர வாகனத்தின் பின்புற சைடில்தான் இசைகருவிகளை கட்டிஎடுத்து சென்றதாக சாட்சியமளித்துள்ளார். எனவே அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து இறந்துபோன நபர் சம்பவ தினத்தன்று இசைகருவி கீபோர்டை வாகனத்தின் பின்புற சைடில் வைத்து கட்டி எடுத்து சென்றுள்ளது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**14.** மேலும் இவ்வழக்கு சம்பவத்தை குறித்தும் குற்றம் சுமத்தப்பட்ட நபரை குறித்தும் மற்ற கண்ணுற்ற சாட்சிகளாக சொல்லப்படும் அ.சா.5 ஓமனா, அ.சா.6 லலிதா, அ.சா.7 பானு மற்றும் அ.சா.8 ராணி ஆகியோர்கள் அதுகுறித்து எதுவும் சாட்சியமளிக்கவில்லை. மேலும் மற்ற கண்ணுற்ற சாட்சிகள் பட்டியல் சாட்சி 3 ஸ்டாலின், பட்டியல் சாட்சி 4 இசக்கி மாடன், தங்கலட்சுமி மற்றும் லீலா ஆகியோர்கள் அரசுதரப்பில் தளர்வு செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்படவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**15.** மேலும் இவ்வழக்கில் முக்கிய பங்களிப்பு சாட்சிகளான குற்றம் சுமத்தப்பட்ட நபரின் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் அ.சா.3 கோபிநாத் மற்றும் அ.சா.4 சுரேஷ் ஆகியோர்கள் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் ஒப்புதல் வாக்குமூலத்தை பொறுத்து எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும் காவல் துறையினரிடம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலமானது இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 25ன் படி ஏற்புடையதல்ல என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**16.** மேலும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை குறித்து எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பது தெரியவருகிறது. எனவே இவ்வழக்கில் அ.சா.1ன் சாட்சியத்தை தவிர்த்து மற்ற சாட்சிகள் யாரும் குற்றம் சுமத்தப்பட்ட நபரை குறித்து சாட்சியமளிக்கமாத நிலையில், அ.சா.1ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து தீர்வு காணவேண்டுமென்ற சூழலில், இவ்வழக்கில் இறந்து போன ஜெயராஜ் என்பவர் இருசக்கர வாகனத்தில் கீபோர்டை பின்புறத்தில் வைத்து சென்றுள்ளது தெரியவருகிறது.

**17.** மேலும் அ.சா.1 இறந்து போன நபரின் நண்பர் என்பதாலும், அவரது சாட்சியத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் அஜாக்கிரதை குறித்து சாட்சியமளிக்காத நிலையிலும், மேலும் மற்ற சாட்சிகள் யாரும் அரசு தரப்பில் முன்னிறுத்தப்படாத நிலையிலும், இறந்துபோன நபர் இருசக்கர வாகனத்தில் கீபோர்டு வைத்து கொண்டு சென்றது தெரியவந்த நிலையிலும், இறந்து போன ஜெயராஜ் என்பவரின் அஜாக்கிரதையால் இவ்விபத்து ஏற்பட்டிருக்கலாமா என்ற சந்தேகம் எழுகிறது.

**18.** இவ்வழக்கில் கவனக்குறைவு மற்றும் வேகம் என்பது சட்டத்தின் பார்வையில் குற்றமுடைய முழுமையான கவனக்குறைவோ அல்லது வேகமோ இருக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. மேற்படி குற்றமுடைய முழுமையான கவனக்குறைவை பொறுத்து இவ்வழக்கின் சங்கதிகள் பொருந்தி வரவில்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**19.** அரசுத்தரப்பு சாட்சியங்களில் இருந்து மேற்படி வழக்கில் இறந்து போன ஜெயராஜன் என்பவரின் மரணத்திற்கு இந்த வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தான் வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் இயக்கி ஏற்படுத்தினார் என்பதற்கு போதிய சான்றாவணங்களை அரசுதரப்பில் முன்னிறுத்தவில்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. மேலும், மேற்படி விபத்திற்கு இந்த வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வேகமான வாகன இயக்கம் மற்றும் கவனக்குறைவுதான் காரணம் என்று அரசுத்தரப்பு **சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவில்லை** என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**20.** இந்நீதிமன்றம் மேற்சொன்ன கருத்தில் கொண்ட விஷயங்களை வைத்தும் சாட்சியம் சான்றாவண சான்று கூறுகளின் அடிப்படையிலும், சூழ்நிலைகளின் அடிப்படையிலும் இந்நீதிமன்றம் அரசுத்தரப்பில் இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீதான இதச 1860 பிரிவுகள் 304A உ/இ 187 r/w 177 MV Actன் கீழ் குற்றச்சாட்டுகளை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

21. <u>தீர்வு:-</u>

முடிவாக, குற்றம் சுமத்தப்பட்ட நபரான **ராஜேஷ், த/பெ. செல்லையன்** என்பவர் மீதான இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவு 304(A) உ/இ 187 r/w 177 MV Act ன் கீழான குற்றச்சாட்கள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி **நிரூபணம் செய்யப்படவில்லை** என்பதால், மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபரை மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்தும், குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் 1973 பிரிவு 248(1) ன் படி வழக்கிலிருந்தும் **விடுதலை செய்தும்** தீர்ப்பளிக்கப்படுகிறது.

மேலும் இவ்வழக்கில் தடயச்சொத்து எதுவும் கைப்பற்றப்படாததால் அது குறித்த உத்தரவு எதுவும் கு.வி.முச 1973 **பிரிவு 452**ன் கீழ் இல்லை.

**22. வழக்கில் கு.வி.மு.ச 1973 பிரிவு 437–A– ன் கீழ் உத்தரவு :–**

வழக்கில் கு.வி.மு.ச 1973 பிரிவு 437–A– ன் கீழ் பிணையப்பத்திரம் பெறப்பட்டுள்ளது. மேற்படி பிணையப்பத்திரமானது 6 மாத காலத்திற்கு நடைமுறையில் இருக்கும் என்றும், பின்னர் அப்பிணையப்பத்திரம் காலாவதியாகி விடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று **06.08.2026** திறந்த இந்நீதிமன்றத்தில் தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

T NARENDRAKUMAR

Digitally signed by T NARENDRAKUMAR
Date: 2026.08.06 18:28:09 +0530

நீதித்துறை நடுவர்

விரைவு நீதிமன்றம், இரணியல்.

**பின் இணைப்பு**

**அரசுத்தரப்பு சாட்சிகள் :–**

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.1 | திரு.விஜில்குமார் | 04.06.2025 | –– | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.2 | திரு.சதாசிவன் | 04.06.2025 | –– | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.3 | திரு.கோபிநாதன் | 04.06.2025 | அ.சா.ஆ.1 | ஒப்புதல் வாக்குமூல சாட்சி |
| அ.சா.4 | திரு.சுரேஷ் | 04.06.2025 | அ.சா.ஆ.2 | ஒப்புதல் வாக்குமூல சாட்சி |
| அ.சா.5 | திருமதி.ஓமனா | 25.06.2025 | –– | சம்பவ சாட்சி |
| அ.சா.6 | திருமதி.லலிதா | 25.06.2025 | –– | சம்பவ சாட்சி |
| அ.சா.7 | திருமதி.பானு | 25.06.2025 | –– | சம்பவ சாட்சி |

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.8 | திருமதி.ராணி | 23.02.2026 | -- | சம்பவ சாட்சி |
| அ.சா.9 | திரு.ஸ்ரீனிவாசன் | 27.07.2026 | -- | சம்பவ சாட்சி |
| அ.சா.10 | திரு.சேவியர் பிராங்கிளின் (உதவி ஆய்வாளர்) | 29.07.2026 | அ.சா.ஆ.3 to அ.சா.ஆ.9 | கூடுதல் சாட்சி |

**<u>அரசுத்தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 /அ.சா.3 | 09.10.2012 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.3ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 /அ.சா.4 | 09.10.2012 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 /அ.சா.10 | 29.09.2012 | புகார்மனு |
| அ.சா.ஆ.4 /அ.சா.10 | 29.09.2012 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 /அ.சா.10 | 29.09.2012 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 /அ.சா.10 | 29.09.2012 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.7 /அ.சா.10 | 30.09.2012 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.8 /அ.சா.10 | 16.10.2012 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.9 /அ.சா.10 | 30.09.2012 | சடலக்கூறாய்வு அறிக்கை |

**அரசுத்தரப்பு சான்று பொருட்கள்** *: இல்லை*

***குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில், சாட்சி, ஆவணம் : இல்லை.***

T NARENDRAKUMAR
Digitally signed by T NARENDRAKUMAR
Date: 2026.08.06 18:28:37 +0530

**நீதித்துறை நடுவர்,**

**விரைவு நீதிமன்றம், இரணியல்.**

Judicial Magistrate, Fast Track Court,
Eraniel.

Court Seal.

“ The parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date’’

## The Hon'ble High Court of Madras in Roc.No. 121910-A/2024/F1, Dated:06.05.2025

## Cover Sheet Annexed to Judgment / Order

| | | | |
|---|---|---|---|
| 1. | Name of the Court | : | Judicial Magistrate, Fast Track Court, Eraniel. |
| 2. | Case Number | : | C.C.No.125/2019 |
| 3. | Date of Judgment of Conviction / Dismissal / Reversal of Acquittal / Dismissal of Bail Application | : | 06.08.2026<br>Acquittal |
| 4. | Name of Person Convicted / Acquittal Reversed / Bail Denied / Bail Cancelled | : | Rajesh, S/o. Chellaiyan |
| 5. | Contact Address of Legal Aid Committee of Court Complex in which the above Court is situated. | | The Hon'ble Chairman,<br>Taluk Legal Services Committee,<br>Court Campus, Eraniel. |
| 5a. | Designation of the person to be contacted | | The Hon'ble Chairman,<br>Taluk Legal Services Committee,<br>Eraniel. |
| 6. | Phone No. of above Legal Aid Committee (between am to pm) | | 04651-220227<br>(10.00 am to 05.45 pm) |
| 7. | Alternative Mobile No. of Legal Aid Committee | | Tmt.S.Shareen Banu<br>Junior Administrative Assistant<br>9952716394 |

T NARENDRAKUMAR

Digitally signed by T NARENDRAKUMAR
Date: 2026.08.06 18:28:39 +0530

Judicial Magistrate,
Fast Track Court, Eraniel.